1977 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு எதிர்க்கட்சித் தலைவர்தான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். நான் சொல்வதில் அர்த்தமில்லை. கேள்விகளில் எதை அனுமதிக்க வேண்டும், எதை அனுமதிக்கக் கூடாது என்பது பேரவைத் தலைவரின் விருப்பம். காரணம் காட்டித்தான் மறுக்கப்பட்டு பதில் வந்திருக்கும். அதை அவையிலே சொல்லக் கூடாது. அந்தப் பிரச்னைக்கே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1977 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

(5) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, எங்கள் கட்சிக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே 30 நிமிடங்கள் தான் நாங்கள் எடுத்திருக்கிறோம் என்று எண்ணுகிறேன். ஆகவே, எனக்கு அரை மணி நேரம் பேச உரிமையிருக்கிறது. அதையா வது கொடுக்க வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் பேரவைத் தலைவரைப்பற்றித் தவறாக நினைத்து விடக்கூடாது. உங்களுக்கு 11 நிமிடங்கள்தான் இருக்கின்றன. நாளைப் பார்த்து 9 நிமிடங் களை அதிகரித்து 20 நிமிடங்கள் கொடுத்துள்ளேன். ஆகவே, 20 நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் பெருவாரியான வெற்றியைப் பெற்று இங்கே ஒரு மக்களாட்சி நடைபெறுகின்றதை நினைக்கும்பொழுது உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். அதுமட்டுமல்ல, இந்த அவையில் கடந்த சட்டசபையில் என்னோடு எதிர்க்கட்சி வரிசையிலிருந்த பல நண்பர்கள் இந்த மக்களாட்சியில் அமைச்சர் களாகப் பார்க்கின்றபொழுதும் அதைவிட நான் மகிழ்ச்சியடை கிறேன் என்பதை முதற்கண் நான் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்,